**<u>IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.</u>**

**DEPOSITION OF WITNESS**

**<u>SC.No.59/2024 - PW-4</u>**

| | |
|---|---|
| Name | திருமதி. கௌரி |
| Husband/Father Name | மணி |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 50 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 08.09.2025.

**(எதிரிகள் 3, 4, 6, 7 ஆஜர். எதிரிகள் 1, 2, 5 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த பஸ்வான் என்னுடைய மகன் ஆவார். 28.06.2021 அன்று என்னுடைய மகனை வினோத் என்பவர் கல்யாணம் நிகழவிற்காக இரு சசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். வரும் வழியில் மேல்ஆவாதம் பெட்ரோல்பங்க் அருகே எனது மகனை வினோத் இறக்கிவிட்டு வந்துவிட்டார். 6 பேர் கொண்ட கும்பல் அன்பரசு, சூர்யா, விக்கி மற்றும் சில நபர்கள் சேர்ந்து என் மகனை வெட்டி விட்டு சென்று விட்டார்கள். எனது மகனை தலையிலும், மார்பிலும், வெட்டி வெட்டு காயம் ஏற்பட்டிருந்தது. எனது மகன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். எனது மகனை அழைத்து சென்ற வினோத் தான் என் வீட்டிற்கு வந்து எனது மகனுக்கு இறப்பு ஏற்பட்டதாக வந்து கூறினார். சம்பவம் குறித்து எனது கணவர் புகார் கொடுத்தார். நான் மட்டும் சென்று எனது மகனை சம்பவ இடத்தில் பார்த்தேன். எனது மகனின் மார்பு முழுவதும்

குத்திவைக்கப்பட்டிருந்தது, தலையிலும் காயங்கள் இருந்தது. நான் சென்று பார்த்த போது எனது மகன் இறந்து விட்டு இருந்தார். இது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ இடத்திலேயே சம்பவ தினத்தன்று போலிசார் என்னை விசாரித்தார்கள். போலீஸ் விசாரணையில் 2016ம் ஆண்டு லோகேஷ் என்பவரை எனது கணவர் மற்றும் இறந்த எனது மகன் பஸ்வான், ரகு, விஜய், வினோத் ஆகியோர் சேர்ந்து கொன்று விட்டதாக கூறியிருந்தேனா என்றால் இல்லை. அவ்வாறு கூறியிருந்தால் அது நான் கொடுத்த வாக்குமூலம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது மகனின் இறநப்பிற்கு காரணம் வினோத் தான் என்றும் அவரையே இந்த வழக்கில் சாட்சியாக சேர்துள்ளார்கள் என்று நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். வினோத் மிது நடவடிக்கை எடுக்கும்மாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். எனது மகனை 6 பேர் கொண்ட கும்பல் கொன்றுவிட்டதகா வினோத் தான் எங்கள் வீட்டில் வந்து கூறிவிட்டு 3 வருட காலம் தலைமறைவாகிவிட்டார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் யார் யார் சேர்ந்து என் மகனை கொன்றார்கள் என்று என்னால் கூறமுடியாது என்று சொன்னால் மேல் ஆவதம் ஆட்கள் எனது மகனை கொன்றதாக வினோத் வந்து என்னிடம் கூறினார். அப்போது நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தோம் அப்போது மதியம் மணி 2. வினோத் கால் மணி நேரம் முன்பு தான் எனது மகனை அழைத்துசென்னார். உடனடியாக எனது கணவரை வினோத் பாதி வழியில் இறக்கவிட்டு ஓடிவிட்டார். பிறகு நான் வேறொரு வண்டியில் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ

இடத்திற்கு தகவல் அறிந்து கால் மணி நேரம் கழித்து சென்றேன். நான் சென்று கால் மணி நேரம் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். என் மகனுக்கு குடிப்பழக்கம் இருந்ததால் அவர் மீது நிறைய வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் வினோத் தான் என் மகனுக்கு குடிப்பழக்கத்தை கற்று கொடுத்தார். எங்கள் ஊருக்கும் மேல் ஆவதம் ஊருக்கும் முன் விரோதம் உள்ளதா என்றால் முன்பிருந்தே இருந்து வந்தது. எனக்கு இந்த கொலை பற்றி எதுவும் தெரியாது என்றும் போலீசார் கூறியதன் அடிப்படையில் தான் 6 பேர் கொண்ட கும்பல் எனது மகனை கொன்று விட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் எனது மகனை வினோத் பாதி வழியிலேயே விட்டு விட்ட விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். எனது மகனை நான் சென்று பெட்ரோல் பங்கு பின்புறம் பார்த்தேன்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.09 18:23:22 +0545

II Additional District and Sessions Judge,

Arakkonam.